உ

சிவமயம்.

# பொய்கையாரருளிச்செய்த

# களவழி நாற்பது

## உரைபாடம்.

இஃது.

ம-ள-ள-ஸ்ரீ,

கொன்றமாநகரம்,

சண்முகசுந்தரமுதலியா

ரவர்களாற்பரிசோதித்து,

திரிசிரபுரம்புத்தகவியாபாரம்

தி-சபாபதிபிள்ளை

யவர்களது

மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

யுவ௵ - மேடரவி.

சிந்தாத்திரிப்பேட்டைசாமிநாய்க்கர்வீதி - நெ-௪௨.

சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்காவன:

நாலடிநான்மணிநானாற்பைந்தொகைமுப்
பால்கடுகங்கோவைபழமொழி-மா மூல
மெய்ந்நிலைகாஞ்சியோடேலாதியென்பவே
கைந்நிலையவாங்கீழ்கணக்கு.

என்பனவாம்.

சிவமயம்.

# களவழிநாற்பது-உரையாடம்.

நாண்ஞாயிற்றுற்ற செருவிற்குவீழ்ந்தவர்
வாண்மாய்குருதிகளிறுழக்கத் - தாண்மாய்ந்து
முற்பகலெல்லாங்குழம்பாகிப் பிற்பக
றுப்புத்துகளிற் கெழூஉம் புனனாடன்
றப்பியாரட்ட களத்து.

எ-து. காலைவந்துற்ற போரின்கட்பட்டவருடைய வாளழுந்துங் குருதியைக்களிறுழக்க வவற்றின்றாளா னேசுருங்கி முற்பகலெல்லாஞ்சேறாய்ப் பிற்பகற்பவள த்துகளாய் விசும்பெங்கும்பரந்து செறியாநிற்கும், நீர் நாடன்பிழைத்தாரைக்கொன்ற களத்து-எ-று. (௧)

ஞாட்பினுளெஞ்சிய ஞாலஞ்சேர்யானைக்கீழ்ப்
போர்ப்பிலிடிமுரசினூடுபோ - மொண்குருதி
கார்ப்பெயல்பெய்தபிற்செங்குளக்கோட்டுக்கீழ்
நீர்த்தூம்புநீருமிழ்வபோன்றபுனனாடன்
றார்த்தமரட்டகளத்து.

எ-து. படையுளொழிந்த நிலஞ்சேர்யானைகளின்கீழ்
க்கிடந்த போர்ப்பில்லாதவிடிபோன்றொலிக்கு முரசி
னாடுபோ மொள்ளிய குருதி மழைப்பெயல்பெய்தபின்
பு செங்குளக்கணாயின்கீழ் நீர்த்தும்புநீருமிழ்வபோ
ன்ற, புனனாடனார்த்தமரட்ட களத்து-எ-று. (௨)

ஒழுக்குங்குருதியுழக்கித்தளர்வா
ரிழுக்குங்களிற்றுக்கோடூன்றியெழூஉ
மழைக்குரன்மாமுரசின்மல்குநீர்நாடன்
பிழைத்தாரையட்டகளத்து.

எ-து. புக்காரையொழுக்குங்குருதியையுழக்கிவீழ்
வா ரிழுக்கப்பட்டகளிற்றுக்கோடுகளேயூன்றியாகவெழு
ம், மழைக்குரல்போன்றமுரசினையுடைய நிறைந்தநீர்
நாடன்பிழைத்தாரைக்கொன்றகளத்து-எ-று. (௩)

உருவக்கடுந்தேர்முருக்கி மற்றத்தேர்ப்
பருதிசுமந்தெழுந்தயானை-யிருவிசும்பிற்
செல்சுடர்சேர்ந்தமலைபோன்ற செங்கண்மால்
புல்லாரையட்டகளத்து.

எ-து. அஞ்சத்தக்ககடியதேரைக்குத்தி கபத்தேரி
னுருளையைச்சுமந்தெழுந்தயானைக ளிருவிசும்பிற்செல்
சுடர்ஞாயிறு சேர்ந்தமலைபோன்ற, செங்கண்மால்பொ
ருந்தாரைக்கொன்ற களத்து—எ-று. (௪)

தெரிகணையெஃகந்திறந்தவாயெல்லாங்
குருதிபடிந்துண்டகாக-முருவிழந்து
குக்கிற்புறத்தசிரல்வாய செங்கண்மா
றப்பியாரட்டகளத்து.

எ-து. தெரிந்தவம்புகளாலும் வேல்களாலுந்திறக்கப்பட்டவெல்லாப்புண்வாய்களினும்படிந்து குருதியையுண்டகாக்கை டம்முடையநிறத்தையிழந்து செம்போத்தின் புறத்தையுடையவாய்ச்சிரல்போன்றவாயையுடையவாயின, செங்கண்மால்பிழைத்தாரைக் கொன்றகளத்து-எ-று. (௫)

நாலாற்றிசையும்பிணம்பிறங்கயானை
யடுக்குபெற்றிக்கிடந்த-விடித்துரறி
யங்கண்விசும்பினுருமெறிந்தெங்கும்
பெருமலைதுவெறிந்தற்றேயருமணிப்
பூணேந்தெழின்மார்பினியறிண்டேர்ச்செம்பியன்றெ
வேந்தனையட்டகளத்து. (௬

எ-து. நான்குநான்கு திசைதோறும் பிணங்கள்மிக யானைகளடுக்கி யுயர்ந்துகிடந்தன விடித்துமுழங்கி யங்கண்விசும்பினுருமெறிந் தெவ்விடத்தும் பெருமலைகளைத் துடக்கறவெறிந்தாற்போலு,மருமணிப்பூணேந் தெழின்மார்பினியறிண்டேர்ச்செம்பியன்ற

ல்வேந்தனையட்டகளத்து—எ-று. அல்லதூஉம்நான்று திசையுமென்பதனை யும்மைத்தொகையாக நான்குநா ன்குமென வும்மையைவிரித் தெட்டுத்திசையென்று கொள்வாருமுளர்—எ-று. (௬)

அஞ்சனக்குன்றேய்க்கும்யானையமருழக்கி
யிங்குலிக்குன்றேபோற்றோன்றுஞ்-செங்கண்
வரிவரான்மீன்பிறழுங்காவிரிநாடன்
பொருநரையட்ட களத்து.

எ-து. அஞ்சனமலையையொக்கும்யானைக ளமரின் கணுழக்கிச் சாதிலிங்கமலைபோலச்சிவந்துதோன்றும் செங்கண்வரிவரால்மீன்பிறழுங் காவிரிநாடன் றன்னோ டுபொருவாரைக்கொன்றகளத்து. (௭)

யானைமேல்யானை நெரிதரவானாது
கண்ணேர்கடுங்கணை மெய்ம் மறைப்ப-வெவ்வாய
மெண்ணருங்குன்றிற்குரீஇயினம்போன்றனவே
பண்ணாரிடிமுரசிற்பாய் புனனீர்நாட
னண்ணாரையட்டகளத்து.

எ-து. யானைகளொன்றோடொன்றுநெரிதர நீ ங்காது கண்ணேர்கடுங்கணைமெய்ம்மறைப்ப வெவ்வா ய மெண்ணருங்குன்றிற்குரீஇனம்போன்றன, பண்ணா ரிடிமுரசிற் பாய்புனனீர்நாட னணாரையட்டகளத்து.()

மேலோரைக்கீழோர்குறுகிக்குறைத்திட்ட
காலார்சோடற்றகழற்கா-லிருங்கடலு
ணீலச்சுறாப்பிறழ்வபோன்றபுனனாட
னேராரையட்டகளத்து.

எ-து. குதிரைமுதலாயினவற்றின் மிசையிருந்தோ ரைக் கீழ்நின்றநிலவாட்கள்சென்று சார்ந்து துணித்தகா ற்கிட்டவர்ணத்தோடற்றகழற்கால்கள் பெருங்கடலுள் கருஞ்சுறாப்பிறழ்வனபோன்ற, நீர்நாடன்பகைவரை யட்டகளத்து—எ-று. (௯)

பல்கணையெவ்வாயும் பாய்தலிற்செல்கல்லா
தொல்கியுயங்குங்களிறெல்லாந்-தொல்சிறப்பிற்
செவ்வலங்குன்றம்போற்றோன்றும்புனனாடன்
றெவ்வரையட்ட களத்து.

எ-து. பலவம்புகளு மெவ்வுறுப்பின்கண்ணுந்தைத் தலாலியங்கமாட்டாது தளர்ந்துவருந்துங் களிறெல்லா மூதியசிறப்பினையுடைய தாதுகிரிபோலத்தோன்றுகின் ற, நீர்நாடன்றெவ்வரையட்டகளத்து—எ-று. (௧௦)

கழுமியஞாட்பினுண் மைந்திழந்தாரிட்ட
வொழிமுரசமொண்குருதியாடித்-தொழின்மடிந்து
கண்காணாயானையுதைப்பவிழுமென

மங்குன்மழையினதிருமதிராப்போர்ச்
செங்கண்மாலட்டகளத்து.

எ-து. மிடைந்தவோரின்கண் வலியிழந்தார்போ கவிட்டவொழிந்தமுரச மொள்ளியகுருதியையாடித் தன்றொழிலைத்தவிர்ந்துபடைகளானூறுபட்டுக்கண்கன் ணுயானைக ளுதைத்தலா லிழுமென்முழங்கன் மழை யோலமுழங்காநிற்கும், கலங்காப்போரையுடைய செங் கண்மால்கொன்றகளத்து-எ-று. (கக)

ஓவாக்கணைபாயவொல்கியெழில்வேழந்
தீவாய்க்குருதியிழிதலாற்-செந்தலைப்
பூவலங்குன்றம் புயற்கேற்றபோன்றனவே
காவிரிநாடன்கடாஅய்க்கடிதாகக்
கூடாரையட்டகளத்து.

எ-து. ஓவா தம்புகடைப் வெழில்வேழந்தள ர்ந்து தீநிறம்போல வாய்த்தகுருதியிழிதலாற் சிவந்த நிறத்தையுடைய செம்மண்மலைக ளம்புயற்கெதிர்ந்த னபோன்ற, காவிரிநாடன்முயன்றுவிரைந்து கூடாரை யட்டகளத்து-எ-று. (கஉ)

நிரைகதிர்நீளெஃக நீட்டிவயவர்
வரைபுரையானைக்கைந்நூற-வரைமே

லுருமெறியபாம்பிற் புரளுஞ்செருமொய்ம்பிற்
சேஎய்பொருதட்டகளத்து.

எ-து. கிளைத்தகதிர்வாள்களைப்பின்பேவாங்கி வீரர் வரையையொத்தயானைகளின்கைகளைத்துணிக்க வரை மேனின் றுருமெறிந்துவிழும்பாம்புபோலவிழுந்துபுர ளாநிற்கும், போர்வலியையுடைய சேய்பொருது கொ ன்றகளத்து—எ-று. (௧௫)

கவளங்கொள்யானை தன்கைகடுணிக்கப்
பவளஞ்சொரிதருபைபோற்-றிகழொளிய
வொண்செங்குருதி யுமிழும்புனலுடன்
கொங்கணையட்டகளத்து.

எ-து. கவளத்தைக்கொள்ளும்யானைகடங்கைகடு ணிக்கப்பட்டுப் பவளத்தைச்சொரிகின்றபைபோல் வி ளங்காநின்றவொளியையுடைய வொள்ளியசெங்குரு தியைச்சொரியாநிற்கும், புனலுடன் கொங்களைக்கொ ன்றகளத்து—எ-று. (௧௬)

கொல்யானைபாயக்குடைமுருக்கியெவ்வாயும்
புக்கவாயெல்லாம்பிணம்பிறங்கத்-தச்சன்
வினைபடுபள்ளியிற்றோன்றுமேசெங்கட்
சினமால்பொருதகளத்து.

எ-து. எவ்விடத்துங் குடையை முருக்கிக் கொல்ய
னைபாய்தலான் வலியானைபுக்கவிடமெல்லாம் பிணம்
நங்கத் தச்சனுல்வினைசெய்யப்படு மிடங்கள்போல
தோன்றுகிற்கும், செங்கட்சினமால் பொருதகளத்
எ-று. (கடு

பருமவினமாகடவித் தெரிமறவ ருக்கி
யெடுத்தவரவத்தி-னார்ப்பஞ்சாக்
குஞ்சரக்கும்பத்துப்பாய்வனகுன்றிவரும்
வேங்கையிரும்புலிபோன்றபுனனாடன்
வேந்தரையட்டகளத்து.

எது. பண்ணினையுடைய மிக்ககுதிரைகள் வீரரா
டத்தப்பட்டுள்ளமிக்கெடுத்தபோரின்க ணார்ப்பையு
சாதயானைகளின்மத்தகத்திற்பாய்வனமலையின்கட்
இன்றவேங்கைப்பெரும்புலிபோன்ற,புனனாடன்வே
ரையட்டகளத்து—எ-று. பண்-குதிரைக்கலனை (கக

ஆர்ப்பெழுந்தஞாட்பினு ளாளாளெதிர்த்தோடித்
தாக்கியெறிதரவீழ்தரு-மொண்குருதி
கார்த்திகைச்சாற்றிற்கழிவிளக்குப்போன்றனவே
போர்க்கொடித்தானைப்பொருபுனனீர்நாட
னார்த்தமரவட்டகளத்து.

எ-து. ஆர்ப்பெழுந்தபோரின்கணூஞமாஞமெதி ர்சென்றுபொருது படைகளையெறிதலாற் சொரியாநின் றவொண்குருதிகள் கார்த்திகைவிழாவின்கண்மிக்கவி ளக்குப்போன்றன, போர்க்கொடியையுந்தானையுமுடை யபொருபுனனீர்நாடனூர்த்தமாகொன்றகளத்து-எ-று.

களிந்தகடலுட்டிமிறிரைபோலெங்கும்
விளிந்தார்பிணக்குருதியீர்க்குந்தெளிந்துகமற்
றிலங்கொள்வாட்டளையவிழ்தார்ச்சேள
யுடற்றியாரட்டகளத்து.

எ-து. மிக்ககடலுட்டியிலுந்திரையும்போலப் பட் டாருடையபிணக்குப்பை யுதிரமுமிழாநிற்கு முறைமையி னையுடைய, தெளிந்திலங்கிய வொள்வாளினையுங்கட்ட விழ்ந்ததாரினையுமுடையசேய் தன்னை வெகுள்வித்தா ரைக்கொன்றகளத்து—எறு. (கஅ)

இடைமருப்பின்விட்டெறிந்தவெஃகங்காழ்மூழ்கி
கடைமணிகாண்வரத்தோன்றி-நடைமெலிந்து
முக்கோட்டபோன்றகளிறெல்லாநீர்நாடன்
புக்கமரட்டகளத்து.

எ-து. ஆனைகளின்மருப்பினடுவேவிட்டெறிந்த வே ல்காம்புகுளித்தலான் வேலின்கடைமணிக்காட்சிவரத் தோன்றி நடைதளர்ந்து மூன்றுகோட்டினையுடையபோல

ன்றகளிறெல்லாம், நீர்நாடன்புக்குகொன்றகளத்து-
எ-று. (௧௯)

இருசிறகரீர்க்கும்பரப்பியெருவை
குருதிபிணங்கவருந்தோற்ற-மதிர்வில்லாச்
சீர்முழாப்பண்ணமைப்பான்போன்றபுனனாட
னேரராரையட்டகளத்து.

எ-து. இரண்டுசிறகின்கண்ணுமுள்ளவீர்க்குகளை ப்பரப்பிக் கழுகுகள் குருதிபிணங்களைக்கவர்கின்ற தோற்றங் கலக்கமில்லாத வோசையையுடைய்முழா வினைப் பண்ணமைப்பானையொத்த,புனனாடனேரரானை யட்டகளத்து—எ-று. (௨0)

இணைவேலெழின்மாருணங்கப்புண்கூர்ந்து
கணையலைக்கொல்லியயானைத்-துணையிலவாய்த்
தொல்வலியிற்றீரத்துளங்கினவாமெல்ல
நிலங்கால்கவர்வுமலைபோன்றசெங்கட்
சினமால்பொருதகளத்து.

எ-து. இணைத்தவேல்களழகியமார்பத்தழுந்து தலாற்புண்மிக் கம்பினலைப்புகளாற்றளர்ந்தயானைக டம்மைமேற்கொண்ட துணைவரையிலவாய்ப்பண்டைத்தம் வலியினீங்கித்தளர்ந்து மெல்லநிலத்தினைக்காலாலேயக ப்படுக்கு மலையைப்போன்று,செங்கட்சினமால்பொருத களத்து—எ-று. (௨௧)

இருநிலஞ்சேர்ந்தகுடைக்கீழ்வரிநுத
லாடியல்யானைத்தடக்கை-யொளிறு
வாளோடாமறவர் துணிப்பத்துணிந்தவை
கொடுங்கோளொண்மதியைநக்கும்பாம்பொக்குமே
பாடாரிடிமுரசிற்பாய்புனனீர்நாடன்
கூடாரைப்பட்ட களத்து.

எ-து. இருநிலத்தின்கண்விழுந்துகிடந்த குடைகளினருகேகிடந்த வரிநுதலையுடைய வென்றியியல்கின்ற யானையின்றடக்கைகளை யொளிறும்வாளையுடையமறவர் துணிப்பத்துணிந்தவை கலை நிறைந்தமதியைச்சென்று தீண்டுகின்றபாம்பினையொக்கும், ஒலிநிறைந்தவிடிபோன்ற முரசினையுடைய பாய்புனனீர்நாடன் கூடாரைப்பட்டகளத்து—எ-று. (உஉ)

எத்திவபவமொறியநுதல்பிளந்து
நெய்த்தோர்ப்புனலுணிவந்த-களிற்றுடம்பு
செக்கர்கொள்வானிற்கருங்கொண்மூப்போன்றனவே
கொற்றவேற்றானைக் கொடித்திண்டேர்ச்செம்பியன்
செற்றாரைப்பட்ட களத்து.

எ-து. வீரரொடுத்தெறிய நுதல்பிளத்தலா லுதிரப்புனலுணிவந்தெழுந்த களிறுகளினுடம்புகள் செக்கர்கொண்டவிசும்பின்கட் கரியமுகிலையொத்தன, கொற்ற

வேற்றானைக்கொடித்திண்டேர்ச்செம்பியன் செற்றாரை யட்டகளத்து—எ-று. (உரு

திண்டோண்மறவரெறியத்திசைதோறும்
பைந்தலைபாரிற்புரள்பவை-நன்கெனைத்தும்
பெண்ணையங்தோட்டம்பெருவளிபுக்கற்றே
கண்ணார்கமழ்தெரியற்காவிரிநீர்நாட
னண்ணாரையட்ட களத்து.

எ-து. திண்ணியதோளையுடையமறவர் வாளா னெறிதலாற்றிசைதோறுங்கருந்தலைகள்சிந்திநிலத்தின் கட்புரண்டுகிடப்பவையெல்லா மிகவும் பனங்காட்டின் கட்பெருங்காற்றுப்புக்கதுபோன்றது, கண்ணிற்சார்ந்த காட்சியையுடைய கமழ்தெரியற்காவிரிநீர்நாடனண்ணா ரையட்டகளத்தின்கண்—எ-று. (உசா)

மலைகலங்கப்பாயுமலைபோனிலைகொள்ளாக்
குஞ்சரம்பாயக்கொடியெழுந்துபொங்குப
வானந்துடைப்பன போன்றபுனனாடன்
மேவாரையட்ட களத்து.

எ-து. மலைகள்கலங்கப்பாயுமலைகள்போல நிலைமை கொண்டு குஞ்சரங்கள்பாய்தலா னவற்றின்மிசைகொ டிகளெழுந்து மிக்குவானத்தைத்துடைப்பனபோன்ற புனனாடன்மேவாரையட்டகளத்து—எ-று. (உஎ)

எவ்வாயுமோடிவயவர்துணித்திட்ட
கைவாயிற்கொண்டெழுந்தசெஞ்செவிப்-புன்சேவ
லைவாய்வயநாகங்கவ்விவிசும்பிவருஞ்
செவ்வாயுவணத்திற்றோன்றும்புனனாடன்
றெவ்வரையட்ட களத்து.

எ-து. எவ்விடத்துஞ்சென்று வீரர்துணித்தகை களைத் தம்வாயிற்கொண்டெழுந்தசெஞ்செவியினையு டையபுல்லியபருந்தின்சேவல்க ளைந்துவாயையுடைய வலியநாகத்தைக்கவ்வி விசும்பிலேயந்துசெல்லுஞ்செ வ்வாய்க்கருடனைப்போலத்தோன்றும், புனனாடன் றெவ் வரையட்டகளத்து—எ-று. (உசு

செஞ்சேற்றுட்செல்யானைசீறிமிதித்தலா
லொண்செங்குருதி தொகுபீண்டிநின்றவை
பூநீர்வியன்மிடாப்போன்றபுனனாடன்
மேவாரையட்டகளத்து.

எ-து. உதிரத்தாற்சேறுபட்ட செஞ்சேற்றின்கட் செல்கின்றயானைகள்வெகுண்டுமிதித்தலாற் குழித்தவி டங்களிற்றொக்கீண்டிநின்றவொண்செங்குருதிகள் சிவ ந்தமலர்களையாக்கிய நீர்மிடாப்போன்ற, புனனாடன்மே வாரையட்டகளத்து—எ-று. (உஎ

ஓடாமறவருருத்துமதஞ்செருக்கி
நீடிடைவாளர்பிணங்கிய-ஞாட்பினுங்
கேட்கத்தோடற்றதடக்கைகொண்டோரி
மிகலனவாய் துற்றியதோற்றமயலார்க்குக்
கண்ணுடிக்காண்பாரிற்றேன்றும்புனனுடை
னண்ணாயட்டகளத்து.

எ-து. ஓடாதவீரர்வெகுண்டு களிப்பானேயிக்குப் பெருமையுடைய வாளினையுடையராய்ப் பொருத போரின்கட் கேட்கத்தோடற்றதடக்கைகொண் டோரி கள்வாயின்கட்கவ்விபதோற்றமயனின்றார்க்குக்கண்ணுடிகாண்பார்போலத் தோன்றுநிற்கும்,புனனுடைனண்ணாயட்டகளத்து—எ-று. (உஅ)

கடிகாவிற்காற்றுற்றெறியவெடிபட்டு
வீற்றுவீற்றேடுமயிலினம்போனுற்றிசையுங்
கேளிரிழந்தாரலமருபவேசெங்கட்
சினமால்பொருதகளத்து.

எ-து. மிக்ககாவின்கட் காற்றுமிக்கெறிதலான்வெருவித் திறந்திறமாகவோடுமயிலினம்போல நான்குதிக்கின்கண்ணுங்கொழுநனையிழந்தமகளிரலறுநிற்பர்,செங்கட்சினமால்பொருதகளத்து—எ-று. (உகூ)

மடங்கவெறிந்துமலையுருட்டுநீர்போற்
றடங்கொண்டவொள்குருதி கொல்களிறீர்க்கு

மடங்காமறமொய்ம்பிற் செங்கட்சினமா
லடங்காரையட்டகளத்து,

எ-து. மலைகளைமறியவெறிந்துருட்டு நீர்போலப் பெருமைகொண்டவொள்ளியகுருதி கொல்களிறுகளை யிழுாநிற்கும், கெடாதமறமார்பினையுடையசெங்கட்சின மாலடங்காரைக்கொன்றகளத்தின்கண்—எ-று. (ரு ●)

ஓடாமறவரெறியநுதல்பிளந்து
கோடேந்துகொல்களிற்றின்கும்பத்தெழிலோடை
மின்னுக்கொடியின்மிளிரும்புனனாடன்
ஞென்ஞரையட்டகளத்து.

எ-று. அஞ்சாவயவரெறியநெற்றிபிளந்த கொம்பே ந்தியிருந்த கொல்களிற்றின்மத்தகத்துள்ள வெழிற்பட்டமுகிலின்கண்மின்னுக்கொடிப்போலவொளிவிடாநிற் கும,புனனாடன்ஞென்ஞரையட்டகளத்தின்கண்—எ-று.

மைபினமர்மேனிநிலமென்னுநல்லவள்
செய்பதுபோர்த்தால்போற்செவ்வென்றுள்-மொ
பூந்தார்முரசிற்பொருபுனனீர்நாடன் (ய்திர்ந்த
காய்ந்தாரையட்டகளத்து.

எ-து. குற்றமில்லாத வழகியமேனியையுடைய நில மென்னுநல்லவள் செய்யதொன்றினைப் போர்த்தாள்

போலச்சிவந்தாள், பூந்தாரினையு முரசினையுமுடைய பொய்தீர்ந்த பொருபுனனீர்நாடன் வெகுண்டாரைக் கொன்ற களத்தின்கண் — எ-று. (௩௨)

பொய்கையுடைந்துபுனல்பாய்ந்தவாயெல்லா
நெய்தலிடையிடைவாளைபிறழ்வனபோ
லையிலங்கெஃகினவிரொளிவாடாயினவே
கொய்சுவலைமாவிற்கொடித்திண்டேர்ச்செம்பியன்
றெவ்வரையட்ட களத்து.

எ-து. பொய்கைக்கரையுடைதலால் தன்கண்முன்புனீர்பரந்தவிடமெல்லா நெய்தற்பூக்கணடுவே வாளைபிறழ்வனபோலே மைதாயிலங்காநின்ற வேல்களோடவிராநின்ற வொளியினையுடையவாள்கள்பரந்தன, உளைகொய்யப்பட்ட சுவலையுடையமாவையும் கொடித்திண்டேரையுமுடைய செம்பியன்றெவ்வரையட்டகளத்தின்கண் — எ-று. (௩௩)

இணரியஞாட்பினுணேற்றெழுந்தமைந்தர்
சுடரிலங்கெஃகமெறியச்-சோர்ந்துக்க
குடர்கொடுவாங்குங்குறுநரிகந்திற்
றுடரொடுகோணாய்புரையுமடைநூக்
சேனெய்வொருதட்ட களத்து.

எ-று. தொடர்ந்து மிடைந்தபோரின்கணெதிர்த்தெழுந்தவீர ரொளிவிளங்காநின்ற வேல்களையெறிதலாற்சோர்ந்து நிலத்தின்கணுக்கவீரர்குடர்களைக்கவ்விக்கொண்டுவாங்குகின்றகுறுநரிக ணேணிற்கட்டப்பட்டசங்கிலியோடுநின்றகோணாய்களையொக்கும், ஐதாகப்பண்ணப்பட்ட பூணினையுடைய சேய்பொருதட்டகளத்தின்கண்—எ-று. (௩௪)

செவ்வரைச்சென்னியரிமானோடவ்வரை
யொல்கியுருமிற்குடைந்தற்றால்-மல்கிக்
கரைகொன்றிழிதருங்காவிரிநாட
னுரைசாலுடம்பிடிமூழ்கவரசோ
டரசுமாவீழ்ந்த களத்து.

எ-று. செய்யவரைகளினுச்சியின்கணுள்ள வரிமாவினோடுகூட வச்செவ்வரைகடளர்ந்துருமேற்றுக் குழிந்தாற்போலும், மானமிக்குக்கரைகளைச்சிதைத்திழியாநின்ற காவிரிநாடனுடைய புகழமைந்தவேல்குளிப்பவரசர்களோடுபட்டம்பெற்றயானைகள்வீழ்ந்தகளத்தின்கண்—எ-று. (௩௫)

ஓஒ உவமனுறழ்வின்றியொத்ததே
காவிரிநாடன்கழுமலங்கொண்டநாண்
மாவுதைப்பமாற்றார்குடையெலாங்கீழ்மேலா

யாவுதைகாளாம்பிபோன்றபுனனுடன்
மேவாரையட்டகளத்து.

எ-து. சிறப்புடைத்தாகவே யொப்புமை மாறுபா டின்றிப்பொருந்திற்று, காவிரிநாடன் கழுமலமென்கிற வூரினைக்கொண்டநாட் புனனுடன் மேவாரையட்டக ளத்தின்கட்புரவிகளானுதைகப்பட்ட மாற்றார்குடைக ளெல்லாம் கீழ்மேலாயுதைக்கப்பட்ட காளாம்பிபோன் றன—எ-று. (கசு)

அரசர்பிணங்கான்ற நெய்த்தோர்முரசொடு
முத்துடைக்கோட்டகளிறீர்ப்ப-வெத்திசையும்
வெள்ளம்புனரம்பிபோன்றபுனனுடன்
றெவ்வரையட்டகளத்து.

எ-து. அரசர்பிணங்க ளுகுக்கப்பட்டவுதிரங்கண் முரசோடு கூட முத்துடைக்கோட்டவாகியகளிறுகளை யீர்ப்பன வெல்லாத்திசையுங்கடலையு மக்கடலைப்புணர் ந்நாவாய்களையும்போன்ற, புனனுடன் றெவ்வரையட்ட களத்தின்கண்—எ-று. (கஎ)

பருமப்பணையெருத்திற்பல்யானைபுண்கூர்ந்
திருமெறிபாம்பிற்புரளுஞ்-செருமொய்மபிற்
பொன்னுரமார்பிற்புனைகழற்காற்செம்பியன்
றன்னுனாயட்டகளத்து.

எ-து. பண்ணினையும் பெருத்தவெருத்தினையுமு டையயானைகள் புண்மிகுதலானுருமேற்றுனெறியப்ப ட்டபெரும்மாம்புபோலப்புரளாநின்ற, செருவலியினை யும் பொன்னாரமார்பினையும் புனைந்தகழற்காலினையுமு டைய செம்பியனுடையாரைக்கொன்றகளத்தின்கண்- எ-று. (கஅ)

மைந்துகால்யாத்து மயங்கியஞாட்பினுட்
புய்ந்துகால்போக்கிப்புலான்முகந்தவெண்குடை
பஞ்சிபெய்தாலமே போன்றபுனனாடன்
வஞ்சிக்கோவட்டகளத்து.

எ-து. தங்கன்மறவலிகள் காலைப்பிணித்தலால் போகாது மிடைந்தபோரின்கட் காம்புபறிந்துபோத லாற் செந்தசையைவெண்குடைகள் செம்பஞ்சிபெய் யப்பட்ட தாலமேபோன்ற,புனனாடன்வஞ்சிக்கோவை க்கொன்றகளத்து—எறு. வஞ்சிக்கோ-கருவூராசன்,வ ஞ்சி-கருவூர்,அஃதுசோழன். (கசு)

வெள்ளிவெண்ணாஞ்சிலான்ஞாலமுழுவனபோ
லெல்லாக்களிறுநிலஞ்சேர்ந்தபல்வேற்
பணைமுழங்குபோர்த்தானைச்செங்கட்சினமால்
கணைமாரிபெய்தகளத்து.

எ-து. வெள்ளியாற்செய்யப்பட்ட வெண்கலப்பை நிலத்தையுழுவனபோல வெல்லாக்களிறுகளுநிலத்தைச்சேர்ந்தன, பலவேலையுமுரசுமுழங்காநின்ற போர்த்தானையுடைய செங்கட்சினமா லம்புமாரிபெய்தகளத்தின்கண் — எ-று. (௪0)

வேனிறத்தீர்க்கவயவராலேறுண்டு
கானிலங்கொள்ளக்கலங்கிச்-செவிசாய்த்து
மாநிலங்கூறுமறைகேட்பபோன்றவே
பாடாரிடிமுரசிற்பாய்புனனீர்நாடன்
கூடாரையட்டகளத்து.

எ-து. வேன்மார்பின்கணழுத்தவீரரானேறுண்டு காறளர்ந்துவீழ்ந்து செவிகளைச்சாய்த்து மாநிலங்கள்கூறுமறைகேட்பனபோன்றன, பாடாரிடி முரசிற்பாய்புனனீர்நாடன்கூடாரையட்டகளத்தின்கண் — எ-று. (௪க)

சோழன்செங்கணானுஞ் சேரமான்கணைக்காலிரும்பொறையுந் திருப்போர்ப்புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான்கணைக்காலிரும்பொறையைப்பற்றிக்கொண்டு சோழன்செங்கணான்சிறைவைத்துழிப் பொய்கையார்களம்பாடிவீடுகொண்டகளவழிநாற்பது-முற்றிற்று

# விளம்பரம்.

இதனால்சகலமானவர்களுக்கும் அறிவிப்பதுயாதெ னில சென்னப்பட்டணம்குஜிலிக்கடைஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தைச்சேர்ந்த கீழண்டைபக்கங்கடையில்புஸ்த கஷாப்பு வைத்திருக்கும்-ஸ்ரீ - கந்தசாமிபிள்ளை அவர்களாலும் திருச்சிறுப்பள்ளிதோடிகடைவீதியில் புஸ்தகவியர்பாரம்-தி-சபாபதிபிள்ளைகடையிலும் அடி யிற்கண்ட வாகடசாஸ்திரங்கள் விற்பனைசெய்துவருகி றபடியால்வேண்டியவர்கள்வாங்கிக்கொள்ளலாம்.

அகத்தியர்சிவகுளிகை-௮ அகஸ்தியர்பச்சைவெ ௧௬
,, சூத்திரம்-௫ பக்ஷிணி ௧௩௪
,, வகார ,, ௧௦ ,, கேசரிகுருநூல ௫௦
,, வழலை ,, ௧௨ ,, கக்கிஷம் ௫
,, ஞானம் ,, ௩௦ தக்ஷிணாமூர்த்திகேசரி ௮
,, ,, ௧௪ ,, வகாரசூத்திரம் ௧௦
,, ,, ௧௨ ஆணிக்கோர்வை ௫௧
,, ,, ௮ திருமூலர்எண்ணெய் ௮
,, அதிசய ,, ௨௭ ,, நாதாந்தகுறிப்பு௧௧
,, முப்பு ,, ௯ கொங்கணர்குளிகை -௮
,, சோதிமணி ,, ௮ வாலை-வயித்தியக்கும்மி .
,, குருக்கிடை ,, ௩௬ வெங்கைக்கோவை
,, தர்க்கசங்கிரகம்௧௬ போகர்சுடலைசூத்திரம்
,, ஊத்துமுறை ௨௪ புலிப்பாணிசிமிழ்வித்தை
,, குருநூல்முப்பு ௫௦ மச்சமுனிவர்கியாழம் ௮
மது ,, வெண்பா நந்தீசர்குளிகை ௮